
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®




ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 209 | உள்ளூர் - 28.07.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 209 | வெளியூர் - 29.07.2026 | புதன்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


12 பாவக்காரகங்கள் + 5-ம் பாவம்... உங்கள் எதிர்காலம்?

828 காலிப்பணியிடங்கள்... UPSC மெகா அறிவிப்பு!

பொறியியல் சேர்க்கை: முக்கிய அறிவிப்பு!

அரசு பேருந்து பயணிகளுக்கு முக்கிய அறிவிப்பு!

## டில்லியில் தேஜ கூட்டணி எம்பிக்கள் ஆலோசனை!

புதுடில்லி, ஜூலை. 28–

டில்லியில் நடந்த தே.ஜ., கூட்டணி எம்பிக்கள் ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், நட்டா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



டில்லியில் பார்லிமென்ட் வளாகத்தில் பாஜ தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்பிக்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக, புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய தேசியவாத குடிமக்கள் கட்சியினர் முதல் முறையாக கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், நட்டா உள்ளிட்டோரும் பங்கேற்றனர். கூட்டத்தில் பங்கேற்ற பார்லிமென்ட் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ கூறியதாவது: சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து தேர்வு முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதே அரசின் முன்னுரிமையாக தொடர்கிறது என்று மீண்டும் வலியுறுத்தினார். பல்வேறு நாடுகளுடன் சமீபத்தில் கையெழுத்திடப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து விவாதித்த போது விவசாயிகளின் நலனில் அரசு கவனம் செலுத்துவதையும் அவர் எடுத்துரைத்தார். இவ்வாறு கிரண் ரிஜிஜூ கூறினார்.

## பேஸ்புக்கில் பிரதமர் மோடியின் செல்பி வீடியோ நீக்கம்; மன்னிப்பு கோரியது மெட்டா நிறுவனம்!

புதுடில்லி, ஜூலை. 28–

நீட் தேர்வு வினாத்தாள் தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட செல்பி வீடியோவை நீக்கியதற்கு மெட்டா நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது; அதிகாரிகளை அரசு நேரில் அழைக்க வாய்ப்புள்ளது.




அண்மையில் நீட் தேர்வு வினாத்தாள் கசிவை தடுப்பது மற்றும் தேர்வு முறைகளை சீரமைப்பது தொடர்பாக மாணவர்களுக்கு முக்கிய வாக்குறுதிகளுடன் பிரதமர் மோடி செல்பி வீடியோ சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அந்த வீடியோ 24 மணி நேரத்திற்குள் 30.3 கோடி பார்வைகளை கடந்து உலக சாதனை படைத்தது.


அப்போது பிரதமர் மோடியின் பேஸ்புக் வீடியோ சிறிது நேரம் தவறுதலாக நீக்கப்பட்டதற்கு மெட்டா நிறுவனம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரியுள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த நீக்கம் நிகழ்ந்ததாகத் தெரிவித்து, பின்னர் அந்த வீடியோ மீண்டும் பேஸ்புக்கில் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது என விளக்கம் அளித்தது. இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசு விசாரித்து வருகிறது, மேலும் தற்காலிக நீக்கம் குறித்து விளக்கமளிக்க மெட்டா அதிகாரிகளை அரசு நேரில் அழைக்க வாய்ப்புள்ளது.

மெட்டா நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர், 'பிரதமர் மோடியின் செல்பி வீடியோ தவறுதலாக அகற்றப்பட்டு, பின்னர் மீட்டெடுக்கப்பட்டுள்ளது' என்று கூறினார்.

## டில்லி போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட 989 பேரில் 101 பேர் கொலை குற்றவாளிகள்; விசாரணையில் அம்பலம்!

புதுடெல்லி, ஜூலை. 28–

டில்லியில் பார்லிமென்டை நோக்கி போராட்டக்காரர்கள் நடத்திய பேரணியின் போது வன்முறையில் ஈடுபட்ட 989 பேரில் 101 பேர் கொலைக் குற்றவாளிகள் என டில்லி போலீசார் தெரிவித்தனர்.



'நீட்' தேர்வு வினாத்தாள் கசிவுக்கு எதிராக போராட்டம் நடத்துவதாகக் கூறி, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்ற அமைப்பு, டில்லியில் போராட்டத்தை தொடங்கியது. 20 நாட்களாக அமைதியான முறையில் நடந்த போராட்டம், கடந்த 20ல் வன்முறையாக வெடித்தது. 'போராட்டத்தில் பங்கேற்றோரை பார்லிமென்டை நோக்கி செல்லுங்கள்' என, அக்கட்சியின் தலைவர் அபிஜித் தீப்கே அறிவுறுத்தினார்.

இதையடுத்து, ஆயிரக்கணக்கானோர் ஒரே நேரத்தில் பார்லி.,யை நோக்கி ஓடத் தொடங்கினர். அவர்களை கட்டுப்படுத்த முயற்சித்த போலீசாருக்கும், அவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் தாக்கியதில், 100க்கும் மேற்பட்ட போலீசார் காயம் அடைந்தனர். இந்த வன்முறையில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

போலீசார்களை தாக்கிய மற்றும் வாகனங்களைச் சேதப்படுத்திய குற்றங்களில் ஈடுபட்ட மொத்தம் 2,873 குற்றவாளிகளை போலீசார் எவ்வாறு விசாரித்தனர் என்பதை, போலீஸ் கமிஷனர் அனுராக் குமார் அரசிடம் சமர்ப்பித்த அறிக்கை விவரிக்கிறது. அவர்களில், 989 பேருக்குக் கொடூரமான குற்றங்களில் முன் குற்றப் பின்னணி இருந்தது கண்டறியப்பட்டது.

குற்றப் பின்னணி கொண்ட இந்த நபர்கள் மீதான கைது மற்றும் விசாரணை உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர வாய்ப்புள்ளது; மாணவர்கள் மீதான வழக்குகள் கைவிடப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன் விபரம் பின்வருமாறு:

* கொலை வழக்கு நிலுவையில் உள்ள நபர்கள்: 101 பேர்
* கொலை முயற்சி வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள்: 62 பேர்
* வழிப்பறி மற்றும் கொள்ளை வழக்கில் தொடர்புடையவர்கள்: 284 பேர்
* ஆயுதச்சட்டத்தின் கீழ் வழக்கில் சிக்கியவர்கள்: 229 பேர்
* ஆட்கடத்தல் வழக்கு நிலுவையில் உள்ளவர்கள்: 19 பேர்
* போக்சோ வழக்கில் சிக்கியவர்கள்; 6 பேர்
* பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்பட்டவர்கள்: 61 பேர்
* போதை மருந்து கடத்தல் வழக்கில் சிக்கியவர்கள்: 67 பேர்

பார்லிமென்டை நோக்கி போராட்டக்காரர்கள் நடத்திய பேரணியின் போது நடந்த வன்முறையில், கொலைக் குற்றச்சாட்டுக்கு உள்ளான 101 நபர்கள், வழிப்பறி மற்றும் கொள்ளை வழக்குகளில் பதிவு செய்யப்பட்ட 284 பேர், மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் பிற குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட 92 பேர் ஈடுபட்டிருந்தனர் என தங்களது விசாரணையில் தெரியவந்துள்ளதாக டில்லி போலீசார் தெரிவித்தனர்.

மாணவர்கள் என்ற போர்வையில் சில சமூக விரோதிகள், மதவெறியர்கள், இந்தியா வளர்வதை பிடிக்காதவர்கள் இதுபோன்ற அருவருக்கத்தக்க செயல்களை செய்திருப்பது தற்போது விசாரணையில் அம்பலம் ஆகி உள்ளது.

## தமிழக பொறியியல் சேர்க்கை: முக்கிய அறிவிப்பு!




சென்னை, ஜூலை. 28–

அரசுப் பள்ளியில் படித்த 7.5% இடஒதுக்கீட்டு மாணவர்களிடம் எந்தவித கல்விக் கட்டணமும் வசூலிக்கக் கூடாதுஎன்று உயர்கல்வித்துறை கல்லூரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. முதல் சுற்று கலந்தாய்வில் 32,250 மாணவர்கள் விருப்பப் பட்டியல் பதிவு செய்ததில், 28,550 பேருக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இறுதி ஒதுக்கீடு பெற்றவர்கள் ஜூலை 26 முதல் 30 வரை அசல் சான்றிதழ்களுடன் கல்லூரிகளில் சேர வேண்டும். விதிமுறைகளை மீறும் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், புகார்களை tn-dote@tndote.com மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் என்றும் உயர்கல்வித்துறை அறிவித்துள்ளது.

## இந்தியாவை நோக்கி "டாலர் மழை"!

# 45 நாளில் 17.4 பில்லியன் டாலர் முதலீடு FCNR திட்டம் கொடுத்த அதிரடி பலன்?

### ரூபாயை வலுப்படுத்தும் ஆர்பிஐ முயற்சி!

புதுடெல்லி, ஜூலை. 28–

இந்திய ரூபாயின் மதிப்பு சரிவையும், அன்னிய செலவாணி இருப்பு குறைவையும் கட்டுப்படுத்த மத்திய அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் (ஆர்பிஐ) இணைந்து எடுத்த நடவடிக்கைக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் (NRI) மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் FCNR (Foreign Currency Non–Resident) வைப்பு திட்டத்தின் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 45 நாட்களில் 17.4 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு இந்தியாவுக்கு வந்துள்ளது.



ஆர்பிஐ வெளியிட்ட தரவுகளின்படி, ஜூலை 17–ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் இந்தியா மொத்தமாக 20.7 பில்லியன் டாலர் அன்னிய முதலீட்டை ஈர்த்துள்ளது. இதில் 17.4 பில்லியன் டாலர் FCNR வைப்பு திட்டத்தின் மூலமேகிடைத்துள்ளது. இது 2013–ஆம் ஆண்டில் இதேபோன்ற சிறப்பு திட்டத்தின் மூலம் கிடைத்த முதலீட்டுக்கு இணையான வேகமான முன்னேற்றமாக கருதப்படுகிறது. ரூபாய் மதிப்பை நிலைநிறுத்தவும், டாலர் வரவினை அதிகரிக்கவும் FCNR வைப்புகளுக்கான சலுகைகள் ஜூன் 8 முதல் செப்டம்பர் 30 வரை அமலில் உள்ளன. இந்த காலகட்டத்தில் 80 முதல் 85 பில்லியன் டாலர் வரை முதலீட்டை ஈர்க்கும் இலக்கை மத்திய அரசு மற்றும் ஆர்பிஐ நிர்ணயித்துள்ளன.

பொதுத்துறை வங்கிகள் இந்த திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தி வருகின்றன. இருப்பினும், ரூபாய் மதிப்பு சரிவை முழுமையாக கட்டுப்படுத்துவதில் இன்னும் சவால்கள் இருப்பதாக எஸ்பிஐ ரிசர்ச் தெரிவித்துள்ளது. எனினும், வெளிநாட்டு முதலீட்டு வரவு அதிகரித்திருப்பது இந்திய பொருளாதாரத்திற்கு முக்கியமான சாதகமான முன்னேற்றமாகவும், அன்னிய செலவாணி இருப்பை வலுப்படுத்தும் நடவடிக்கையாகவும் பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

## முதல்வர் அலுவலகம் புதிய இடத்தில்!

சென்னை, ஜூலை. 28–

முதலமைச்சர் அலுவலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாற்றப்படுவதாக தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. முதலமைச்சர், முதலமைச்சரின் செயலாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் அறை நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது. 1,3,5,7,8 ஆகிய மாடிகளில் உள்ள கூட்ட அரங்குகளை உடனடியாக பொது கட்டிட பிரிவுக்கு அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.




இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையின் பத்தாவது தளத்திற்கு, இட நெருக்கடியின் காரணமாகவும் முதலமைச்சரின் அலுவலகம், முதலமைச்சரின் செயலாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் அறை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாலும், நிர்வாகக் காரணங்களினாலும் கீழ்க்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## மேகதாது அணை விவகாரத்தில் பிரதமர் மோடிக்கு முதல்வர் விஜய் கடிதம்!

சென்னை, ஜூலை. 28–

மேகதாது விவகாரத்தில் பிரதமர் மோடி தலையிட முதலமைச்சர் விஜய் கோரிக்கை விடுத்துள்ளார். மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் உள்ளிட்ட மாநிலங்களின் ஒப்புதலை கர்நாடகம் பெற வேண்டியதில்லை என்ற ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரின் பதில் ஏமாற்றம் அளிக்கிறது.

மேகதாது அணை கட்ட தமிழ்நாடு அனுமதி தேவையல்லை என்ற நீர்வளத்துறை பதிலை திரும்பப் பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.






தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், வேலூர், விஐடி பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர் டாக்டர் ஜி. விசுவநாதன், துணைத் தலைவர்கள் டாக்டர் சங்கர் விசுவநாதன், டாக்டர் சேகர் விசுவநாதன், டாக்டர் ஜி.வி. செல்வம் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 28.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 12-ம் தேதி

# இந்தியாவின் அடுத்த 25 ஆண்டுகளை தீர்மானிக்கப் போவது Gen Z தலைமுறை!



இந்தியாவின் எதிர்கால அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், வேலைவாய்ப்பு, சினிமா, தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் Gen Z தலைமுறையின் தாக்கம் அதிகரிக்கப் போவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தற்போது இந்தியாவில் 14 முதல் 29 வயதுக்குட்பட்ட சுமார் 40 கோடி பேர் Gen Z தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இது அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையைவிட அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் பிறப்பு விகிதம் குறைந்து வருவதால், அடுத்த 2025 ஆண்டுகளுக்கும் அதிக மக்கள் தொகை கொண்ட தலைமுறையாக Gen Z–வே நீடிக்கும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். இதனால் அரசியல் கட்சிகள், நிறுவனங்கள், தொழில்துறைகள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் அனைத்தும் இந்த தலைமுறையின் விருப்பங்களை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

வேலைவாய்ப்பு சந்தையில் புதிய பணியாளர்களாகவும், நாட்டின் மிகப்பெரிய நுகர்வோர் குழுவாகவும் Gen Z உருவெடுத்து வருகிறது. இதன் காரணமாக நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு, சம்பளக் கொள்கை, பணிச்சூழல், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் அனைத்தும் இந்த தலைமுறையை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்படும்.

அதேபோல், தேர்தல்களில் Gen Z வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அரசியல் கட்சிகளின் தேர்தல் வியூகங்களும் இளைஞர்களை மையமாகக் கொண்டே அமையும். சமூக வலைதளங்கள், செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் பொருளாதாரம், ஆன்லைன் வர்த்தகம், பொழுதுபோக்கு உள்ளிட்ட துறைகளிலும் Gen Z–யின் விருப்பங்களே சந்தையின் போக்கை நிர்ணயிக்கும்.

இதனால், இந்தியாவின் அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சி பாதை, சந்தை மாற்றங்கள் மற்றும் அரசியல் முடிவுகளை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக Gen Z தலைமுறை உருவெடுக்கிறது என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

# உள்ளாட்சி நிதி ஆய்வுக் குழுவுக்கு கூடுதல் அவகாசம்!




சென்னை, ஜூலை. 28–

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 7–வது மாநில நிதிக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடு ஆகஸ்ட் 31–ல் இருந்து டிசம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அலாவுதீன் தலைமையிலான இக்குழு, உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மதிப்பாய்வு செய்து, அரசுக்கு விரிவான பரிந்துரைகளை வழங்க உள்ளது. இதற்காக 4 மாதங்கள் கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் மனுக்களுக்கு 5 நாட்களில் தீர்வு கட்டாயம்!



சென்னை, ஜூலை. 28–

ஆசிரியர்களுக்காக மாதந்தோறும் நடைபெறும் சிறப்பு குறைதீர்ப்பு முகாம்களில் அளிக்கப்படும் மனுக்கள் மீது 5 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும் என தொடக்கக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

பணிப்பதிவேடு, சிறப்பு நிலைத் தகுதி, ஊதியப் பலன்கள், பணிமாறுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மனுக்கள் அளித்து வருகின்றனர். சில மாவட்டங்களில் முகாம்கள் முறையாக நடைபெறாமல், மனுக்கள் மீது நடவடிக்கை தாமதமாகிறது என்றபுகாரைத்தொடர்ந்து இந்தஉத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ரூ.13 லட்சம் கோடி கடனுக்கு ‘மாஸ்டர் பிளான்’... விஜய் அரசு!




சென்னை, ஜூலை. 28–

தமிழக அரசின் ரூ.13 லட்சம் கோடி கடன் சுமையை குறைத்து, அரசின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில், பொருளாதார நிபுணர் மான்டெக் சிங் அலுவாலியா தலைமையில் 6 பேர் கொண்ட உயர்மட்ட குழுவை விஜய் தலைமையிலான அரசு அமைத்துள்ளது.

வரவிருக்கும் மாநில பட்ஜெட்டை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில், கே.பி. கிருஷ்ணன், அர்பிந்த் மோடி, நஜிப் ஷா, எம்.ஏ. சித்திக், எம். சுரேஷ் பாபு உள்ளிட்ட நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு, மாநிலத்தின் சொந்த வரி மற்றும் வரி அல்லாத வருவாயை அதிகரிப்பது, அரசு செலவுகளை சொந்த வருவாய் மூலம் சமாளிக்கும் செயல்திட்டம் உருவாக்குவது, அரசின் நிலம் மற்றும் சொத்துகளை பணமாக்கும் வழிகள், மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் வருவாய், கட்டண வசூல், வரி ஏய்ப்பை தடுப்பது மற்றும் நிர்வாக செயல்திறனை மேம்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில், தமிழகத்தின் SOTR–GSDP விகிதம் 5.45% ஆக குறைந்துள்ளதுகுறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் மாநில வருவாயை வலுப்படுத்த இந்தக் குழு முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிற மாநிலங்களுக்கு ஜல்லி, கற்கள் அனுப்ப தடை!!



சென்னை, ஜூலை. 28–

தமிழகத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு ஜல்லி, கட்டுமான கற்கள் மற்றும் கனிமங்களை கொண்டு செல்ல தமிழக அரசு 3 மாதங்களுக்கு தற்காலிக தடை விதித்துள்ளது. மாநிலத்தின் கனிம வளங்களை பாதுகாப்பது, சட்டவிரோத சுரங்கம் மற்றும் முறைகேடான கனிமக் கடத்தலை கட்டுப்படுத்துவது, மேலும் உள்நாட்டு தேவைக்கு முன்னுரிமை அளிப்பது உள்ளிட்ட காரணங்களால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை காலத்தில், தமிழக எல்லையை கடந்து ஜல்லி மற்றும் கட்டுமானக் கற்களை பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படாது. இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் சுரங்கத் துறையினருக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. தடை உத்தரவை மீறி கனிமங்களை கொண்டு செல்ல முயற்சிப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை கட்டுமானத் துறையிலும், கல் குவாரி தொழிலிலும் தற்காலிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றாலும், கனிம வளங்களை ஒழுங்கு படுத்தவும், சட்டவிரோத சுரங்க செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும் இந்த முடிவு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மூன்று மாதங்களுக்குப் பிறகு நிலைமையை ஆய்வு செய்து, அடுத்தகட்ட முடிவை தமிழக அரசு எடுக்கவுள்ளது.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 07 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,32,100/– மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், வழங்கினார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.பூஷணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# நல் கிராமவயல் சாலை: ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஜூலை. 28–

திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட நல் கிராம வயல் கிராமத்தில், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சாலை சீரமைக்கப்படாததால் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

சேதமடைந்த சாலையால் இருசக்கர வாகன விபத்துகள் அதிகரித்துள்ளதுடன், பள்ளி மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்வதிலும், அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட சேவை வாகனங்கள் கிராமத்திற்குள் வருவதிலும் சிரமம் நிலவுவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.


# லாஞ்சியடி பெண்கள் ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஜூலை. 28–

திருவாடானை தாலுகா லாஞ்சியடி கிராமம் சிங்காரவேல்நகர் பகுதியைச் சேர்ந்த பெண்கள், சாலை, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உடனடியாக ஏற்படுத்தக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் இல்லாததால் மீனவ குடும்பங்கள், பள்ளி மாணவர்கள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும், அரசு வளர்ச்சிப் பணிகளுக்கு சிலர் இடையூறு விளைவிப்பதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 12 பாவக்காரகங்கள் + 5 ஆம் பாவம்... உங்கள் எதிர்காலம்?




**5ஆம் பாவம் என்றால் என்ன?**

5ஆம் பாவம் ஒரு நிலையற்ற பாவமாகும். அதாவது கொடுப்பினை இல்லை என்றாலும் தசா புத்தி வழியாக இந்த பாவ காரகங்களைப் பெறமுடியும் என்பது இதன் பொருள்.5ஆம் பாவத்தின் காரக கிரகங்களாவன., குழந்தை,விந்து எண்ணிக்கை, சினை முட்டை உற்பத்தி போன்றவற்றிற்குகுருவும், மற்றும் காதல், கலை, ரசனை, அழகு இவற்றிற்கு காரணமான சுக்கிரனும் காரக கிரகங்களாகும். 5ஆம் பாவம் என்பது லக்னத்திற்கு மிகவும் சாதகமான திரிகோண பாவம் என்பதால், லக்னத்திற்கு சுகம் தரும், உடல் உழைப்பற்ற காரகங்களை தன்னுள் கொண்டுள்ளது. லக்னம் (ஜாதகர்) நிகழ்காலம், 5ஆம் பாவம் குழந்தை எதிர்காலம்.

**5ஆம் பாவம் விளக்கம்**

5ஆம் பாவம் என்பது லக்னத்தின் திரிகோண பாவமாகும். திரிகோண பாவங்கள் ஒன்றை விட ஒன்று வலிமையானது என்பதால் லக்னத்தை அதன் தனித்தன்மையை மெருகேற்றும், ஜாதரால் மட்டுமே செய்ய முடிந்த இயற்கை அறிவை கொண்டுள்ளது. “ருண ரோக சத்ரு” என்ற 6ஆம் பாவத்தின், அனைத்து காரகங்களுக்கும் எதிரான காரகங்களைப் 5ஆம் பாவம் பெற்றுள்ளது. 5ஆம் பாவம் என்பது, ஒருவருக்கு நோய் வந்தபின் உடம்பின் உள்ளேச் சென்று, நோய்க் கிருமிகளை அழிக்கப் பயன்படுத்தும் அடுத்தக்கட்ட அறிவு அதாவது பின் யோசனை ஆகும்.

**5ஆம் பாவம் சிறப்பு**

“தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள். தம்தம் வினையான் வரும்”

குறள் பொருள்:

அதாவது தம்முடைய மக்களே தம்முடைய பொருள்களாம். அப்பொருளாகிய மக்களோ அவர்தம் ஊழ்வினையால் உண்டாகும் பயனாம்.

அப்படிப்பட்ட உயர்ந்த செல்வமான பிள்ளைச் செல்வத்தை கொண்ட பாவமாகும்.

லக்ன பாவத்தின் திரிகோண பாவம் என்பதால், லக்னத்தில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை அழிக்கக்கூடிய நோய் கிருமிகளை அழிக்கும் வெள்ளை அணுக்களை கொண்டது 5ஆம் பாவம் தன்னுள் கொண்டுள்ளது. 5ஆம் பாவம் வலுத்திருந்தால், சிற்றின்பங்களை நன்கு அனுபவிப்பார்.

**காரகங்கள்**

இயற்கை, ரசனை, அழகு, கலை, இசை, மென்மையான உணர்வுகள், இன்ப உணர்வுகள், நகைச்சுவை உணர்வுகள், மகிழ்ச்சி, கவிதை, விளையாட்டு, அரசியல், அன்பு, பாசம், கவர்ச்சி, காதல், குழந்தை உருவாக்கும் திறன்,விந்து உற்பத்தி, ஹார்மோன்கள், கருமுட்டை உற்பத்தி போன்ற அகத்தை மகிழ்விக்கும் காரகங்கள் இதில் உள்ளன. பொறுப்புணர்ச்சியற்ற, உழைக்காமல் (உடல் உழைப்பற்ற) பொருளாதாரத்தை பெறுவது (கமிஷன்). அழகுப் படுத்திக்கொள்வது, குழந்தைத்தனம், இளமை ஆகியவையும் இதன் காரகங்கள் ஆகும்.

**5ஆம் பாவம் உறுப்புகள்**

இதயம்,முதுகுத்தண்டு, எல்லாவித ஹார்மோன்கள், பாலின ஹார்மோன்கள், வெள்ளை அணுக்கள், உடலின் புரதச்சத்துக்கள் போன்றவை 5ஆம் பாவத்தின் உறுப்புகள் ஆகும்.

5ஆம் பாவம் தான் நின்ற நட்சத்திரம் உபநட்சத்திரம் வாயிலாக 1,3,7,11 பாவங்களைத் தொடர்பு பெற்றால்.,

ஹார்மோன் உற்பத்தி,உடலின் செல்களின் வளர்ச்சி, கொழுப்பை கரைத்தல் ஆகியவற்றிற்கு காரணமான நிணநீர்உற்பத்தி,

ஆகியவை சிறப்பாக இருக்கும். இவை அகக்காரகங்களை சிறப்பாக வளர்த்தும், அதே சமயம் புறக்காரகங்களை முற்றிலும் தடுக்காமலும் உள்ள பாவங்கள் ஆகும். 2ஆம் பாவத்திற்கு 3,7,11ம் பாவங்கள் 8,12 பாவங்களாக வரவில்லை. லக்னத்தையும் கெடுக்காது என்பதால், இவை பொருளாதாரத்திற்கும் மிதமான பாவங்கள் ஆகும். 5ஆம் பாவம் 5,9 என்றபாவத்தொடர்புகளைப் பெற்றால் என்னென்ன பலன் கிடைக்கும் பார்ப்போம்.

**5ஆம் பாவத்தின் அகக் காரகங்களை**

5ஆம் பாவத்தின் அகக் காரகங்களை, அதாவது 5ஆம் பாவ உறுப்புகளை சிறப்பாகச் செயல்பட வைக்கும். அதே சமயத்தில் 2,6,10 என்ற பொருட்பற்றான பாவத்திற்கு 5,9ஆம் பாவங்கள் 4,8,12ம் பாவங்களாக வருவதால், அவை பொருளாதாரத்திற்குச் சிறப்பில்லை. ஆனால் இயற்கை அறிவால், அதன் நுண்ணியத்தன்மையால் இவர்கள் மீது, மற்றவர்களுக்கு ஓர் ஈர்ப்பு இருக்கும். காதல் உணர்ச்சிகள் அதிகம் இருக்கும். தங்களது மகிழ்ச்சிக்காகவும்,குழந்தைகளுக்காகவும் மிகவும் ஆடம்பர செலவு செய்வார்கள்.

**5ஆம் பாவம் 2,4,6,10 என்ற பாவத் தொடர்புகளைப் பெற்றால்.,**

இந்த பாவங்கள் இயற்கை, தனித்தன்மை கொண்ட பாவமான 5ஆம் பாவத்திற்குச் சிறப்பான புற வாழ்க்கையத் தரும் பாவத் தொடர்புகள் ஆகும்.இந்தத் தொடர்புகளைப் பெற்றால் அந்த குறிப்பிட்டத் துறையில் சாதனைகளைப் படைப்பார்கள். 4ஆம் பாவம் 5ஆம் பாவத்திற்கு 12ஆம் பாவம் என்றாலும், லக்னத்திற்கு 30% நன்மை என்பதால், இயற்கை அறிவு மூலமாக மாறாத, கோட்பாடுகளை உருவாக்குவார்கள்.

அதற்கு உதாரணமாக ஜோதிடத்தில், விளையாட்டு துறையில், சினிமா மற்றும் அரசியல் துறைகளில் தனக்கென ஒரு இடத்தை பிடிப்பதோடு எதிர்காலத்தில் பிறருக்கு ஒரு படிப்பினையை உருவாக்கு வார்கள்.

**இரட்டைப்படைப்பாவங்கள்**

இரட்டைப்படைப்பாவங்கள் தான் நின்ற நட்சத்திரம் உபநட்சத்திரம் வாயிலாக 2,4,6,10 பாவங்களைத் தொடர்பு கொள்வதை விட, ஒற்றைப்படை பாவங்கள் 2,4,6,10 பாவங்களைத் தொடர்பு கொள்வது மிகவும் உன்னதமான உயர்ந்த நிலையை கொடுக்கும் (Unlimited Power).

அதாவது அவர்களின் அறிவித்திறமையை யாராலும் கணிக்க முடியாத நிலையில் இருக்கும்.

5ஆம் பாவம் தனியே 4ஆம் பாவத் தொடர்பு பெற்றால் , மலட்டுத் தன்மை, ரசனை குறைபாடு ஏற்படும். கற்பு உடையவர் எனவும், உடல் சார்ந்த ஒழுக்கம் உடையவர் எனவும் சொல்லலாம் காரணம் பாலியல் ஹார்மோன்களின் குறைவாகவே இருக்கும்.

**5ஆம் பாவம் 8,12 என்ற பாவத் தொடர்புகளைப் பெற்றால்,**

5ஆம் பாவம் 8,12 என்ற பாவத் தொடர்புகளைப் பெற்றால், இவை லக்னத்திற்கு மிகவும் மோசமான பாவங்கள் என்பதால், 5 ஆம் பாவ காரகங்கள், அந்த பாவ உறுப்புகளின் மூலமாகவும், அதன் தொழில்கள் மூலமாகவும் ஜாதகர் வலி, வேதனைகளை அனுபவிப்பார்.

8ஆம் பாவத் தொடர்புபெறும்போது, அந்த குறிப்பிட்ட பாவ உறுப்புகளில் மாற்றம், உறுப்புகளின் செயல்பாடுகளில் மாற்றம், தொழிலில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்.

**உடல் நல பிரச்னைகள்**

12ஆம் பாவம் என்பது குறிப்பிட்ட பாவச் செயலை மேலே தொடர விடாமல் உடனே துண்டிப்பது, உறுப்புகளைச் செயல் இழக்கச் செய்வது போன்ற பிரச்சனைகளைக் கொடுக்கும். உதாரணமாக குழந்தைகள் மூலம் பிரச்சனை, ஹார்மோன்கள் குறைபாடு, முதுகெலும்பு பிரச்சனை, காதல் தோல்வி, இருதய கோளாறு ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கையில் நிறைய இரகசியம், மற்றும் அந்தரங்கம் தொடர்பானப் பிரச்சனையும் ஏற்படும். 5ஆம் பாவம் 8ஆம் பாவத்தை தொடர்பு கொண்டால் குழந்தையின்மை, இழப்பு , அவர்கள் மூலமாக பிரச்சனை, மற்றும் காதல் தோல்வி மூலமாக “சித்த பிரமை” போன்றவையும் ஏற்படும்.

# ஆகஸ்ட் 1 முதல் தட்கல் டிக்கெட் புதிய விதி!





சென்னை, ஜூலை. 28–

ஆகஸ்ட் 1 முதல் மேற்கு மத்திய ரயில்வே (WCR) மண்டலத்தில் தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கு புதிய டோக்கன் முறைஅறிமுகமாகிறது. கூட்ட நெரிசல் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க, ஏசி தட்கல் டிக்கெட்டுக்கு காலை 8.309.00 மணி, ஸ்லீப்பர் தட்கலுக்கு காலை 9.009.30 மணி வரை டோக்கன்கள் வழங்கப்படும். பின்னர் ஏசி முன்பதிவு காலை 10 மணிக்கும், ஸ்லீப்பர் முன்பதிவு காலை 11 மணிக்கும் தொடங்கும்.

ஒவ்வொரு முன்பதிவு மையத்திலும் ஏசி தட்கலுக்கு 10 டோக்கன்களும், ஸ்லீப்பர் தட்கலுக்கு 15 டோக்கன்களும் மட்டுமே வழங்கப்படும். இந்த நடைமுறை வெற்றிகரமாக செயல்பட்டால், நாடு முழுவதும் உள்ள மற்ற ரயில்வே மண்டலங்களிலும் படிப்படியாக அமல்படுத்த ரயில்வே வாரியம் திட்டமிட்டுள்ளது.




## எச்சரிக்கை... அடிக்கடி Fast Food சாப்பிடுகிறீர்களா? ஆபத்து!



இன்றைய அவசர வாழ்க்கை முறையில் துரித உணவுகள் (Fast Food) பலரின் அன்றாட உணவாக மாறிவிட்டன. ஆனால், இவற்றை அடிக்கடி சாப்பிடுவது உடல்நலத்திற்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

துரித உணவுகளில் அதிகளவு சுத்திகரிக்கப்பட்ட மாவுச்சத்து, சர்க்கரை, டிரான்ஸ் கொழுப்பு மற்றும் நிறைவுற்ற கொழுப்பு இருப்பதால், இரத்தத்தில் சர்க்கரை அளவு திடீரென உயர்கிறது. இதனால் இன்சுலின் எதிர்ப்பு உருவாகி, வகை–2 நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது.

மேலும், இதில் உள்ள கெட்ட கொழுப்புகள் உடலில் சேர்ந்து கொலஸ்ட்ராலை அதிகரித்து, இரத்த நாளங்களில் அடைப்பை உருவாக்கும். இதன் விளைவாக உயர் ரத்த அழுத்தம், இதய நோய், மாரடைப்பு போன்ற ஆபத்தான பிரச்சினைகள் ஏற்படலாம்.

மருத்துவ நிபுணர்கள் கூறுவதாவது, துரித உணவுகளை அடிக்கடி சாப்பிடுவதைத் தவிர்த்து, காய்கறிகள், பழங்கள், முழுதானியங்கள் மற்றும் சத்தான வீட்டுச் சாப்பாட்டை அதிகம் எடுத்துக்கொள்வதே உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சிறந்த வழியாகும். உடல்நலத்தை காக்க, துரித உணவுகளை அளவோடு மட்டுமே சாப்பிட வேண்டும் என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

# காங்கோவில் 17-வது எபோலா தொற்று தீவிரம்; தடுப்பூசி, சிகிச்சை உருவாக்கும் முயற்சிகள் வேகம்!

பிரஸ்ஸாவில்லி, ஜூலை. 28–

ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயகக் குடியரசில் பரவி வரும் 17வது எபோலா தொற்று மேலும் தீவிரமடைந்துள்ளது. இதுவரை 375 பேருக்கு எபோலா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், 1,354 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 நாட்களில் மட்டும் சுமார் ஆயிரம் புதிய தொற்று பாதிப்புகள் பதிவாகியிருப்பது கவலைக்குரியதாக உள்ளது. கடந்த மே 15ஆம் தேதி இந்த எபோலா பரவல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக வன்முறை மற்றும் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு



காங்கோ பகுதிகளிலேயே தற்போது தொற்று அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக தெற்கு சூடான் மற்றும் உகாண்டா நாடுகளின் எல்லையை ஒட்டிய இடூரி மாகாணத்தில் மட்டும், மொத்த பாதிப்புகளில் சுமார் 90 சதவீதம் பதிவாகியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய தொற்று புண்டிபுக்யோ வகை எபோலா வைரஸால் ஏற்படுகிறது. இந்த வகை வைரஸுக்கு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சையோ இல்லை. இருப்பினும், நோய்த் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், மேலும் பல நோயாளிகளை விரைவாக அடையாளம் காண முடிந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உடல் திரவங்கள் மூலம் பரவும் எபோலா வைரஸ், தீவிர இரத்தக்கசிவு காய்ச்சலை ஏற்படுத்தக்கூடியது. கடந்த 50 ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் மட்டும் 15,000–க்கும் அதிகமானோர் இந்த நோயால் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து, புண்டிபுக்யோ வகை எபோலாவுக்கு எதிரான தடுப்பூசி மற்றும் மருந்துகளை உருவாக்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் உருவாக்கிய பரிசோதனைத் தடுப்பூசி முதல் தன்னார்வலர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் பல தடுப்பூசிகள் மற்றும் இரண்டு சிகிச்சை மருந்துகள் மருத்துவப் பரிசோதனைக்குத் தயாராகி வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவில் தற்போது எபோலா நோய் பரவும் பாதிப்பு எதுவும் பதிவாகவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வேலை வாய்ப்பு

## ஒரே அறிவிப்பில் 828 வேலைகள்... UPSC வெளியிட்ட மெகா அறிவிப்பு!

நிறுவனத்தின் பெயர்: யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (UPSC)
அறிவிப்பு எண்: 51/2026
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு வேலை
பணியின் தன்மை: நிரந்தர பணி
காலிப்பணியிடங்கள்: 828 (முதல்வர், துணை முதல்வர் பணியிடங்கள்)
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கிய தேதி: 25.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 14.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.upsc.gov.in

# டெல்லி புத்தக வெளியீட்டு விழாவில் முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்கவில்லை - வைகோ!



சென்னை, ஜூலை. 28–

சென்னை தலைமைச் செயலகத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:–

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 30 ஆண்டுகளில் நான் ஆற்றிய ஆங்கில உரைகளின் தொகுப்புகள் 4 தொகுப்புகளாக அச்சிடப்பட்டு. அதை டெல்லியில் 'கான்ஸ்டிடியூஷன் கிளப்'பில் ஆகஸ்டு 4–ந் தேதியன்று வெளியிட திட்டமிடப்பட்டது. மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி அந்த நூல்களை வெளியிட இருக்கிறார். அவற்றின் முதல் பிரதியை பெற்றுக்கொள்ள முதல்–அமைச்சர் விஜய் இசைவளித்தார்.

ஆனால், நிகழ்ச்சியில் முதல்–அமைச்சர் விஜய் பங்கேற்றால் நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் கூட்ட நெரிசல் ஏற்படக்கூடும் என்பதால், அந்த நிகழ்ச்சியிலே பங்கெடுப்பதை தவிர்த்துவிடலாம் என்று முதல்–அமைச்சரிடம் கூறினேன். மேலும், அதே நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு சென்னையில் வெளியிடும்போது அதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

# உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம்!

சென்னை, ஜூலை. 28–

2026–2027–ம் ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட் ஆகஸ்டு 5–ந் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கிறது. அதற்கு அடுத்த நாள் (6–ந் தேதி) வேளாண் பட்ஜெட் தாக்கல் ஆகிறது. த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் என்பதால் எதிர்பார்ப்பு அதிகம் நிலவுகிறது.

இந்த நிலையில், பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. உறுப்பினர்கள், பட்ஜெட்



கூட்டத் தொடரில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை வழங்க இருக்கிறார். இதற்காக, தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் காணொலிக்காட்சி வழியாக நடைபெற இருக்கிறது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கும் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், சட்டசபை கூட்டத் தொடரில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எந்தப் பிரச்சினைகளை முன்னெடுக்க வேண்டும், விவாதத்தின்போது யார் யார் பேச வேண்டும் என்பது குறித்து ஆலோசனைகள் வழங்க இருக்கிறார்.

## காமராஜர் காலை உணவு திட்டம்:

# டெண்டரில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு நிபந்தனைகள்!




சென்னை, ஜூலை. 28–

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 6–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் வருகிற செப்டம்பர் மாதம் 17–ந்தேதி முதல் 8–ம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. காலை உணவு திட்டம் 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு காலை உணவு வினியோகம் செய்வது தொடர்பாக டெண்டரில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு நிபந்தனைகளை தமிழக அரசு வெளி யிட்டுள்ளது. அதில், ரவா உப்புமாவுடன் சாம்பார் உள்ளிட்ட 13 வகை உணவுகளில் இருந்து நாள்தோறும் ஏதேனும் ஒரு உணவு மாணவர்களுக்கு காலை உணவாக வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காலை உணவு 150 முதல் 200 கிராம் எடையுடன் 294 கலோரி ஆற்றல் வழங்கும் விதமாக இருக்கவேண்டும். காலை 7.30 மணிக்குள் பள்ளிகளுக்கு சூடான உணவு (இன்சுலேட்டட் ஹாட் பாக்ஸ்களில் எடுத்து சென்று) வினியோகிக்கவேண்டும். தலைமை ஆசிரியரின் சான்று கிடைத்த பிறகே ஒப்பந்ததாரருக்கு மாதாந்திர பணம் வழங்கப்படும். உணவின் தரத்தை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மூன்றாம் தரப்பு ஆய்வு மூலம் கண்காணிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'சூப்பர் எல் நினோ' தாக்குதல்: தேயிலை சாகுபடி பாதிப்பு!



ஊட்டி, ஜூலை. 28–

'சூப்பர் எல் நினோ' தாக்கத்தால் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றம், நீலகிரியில் தேயிலை சாகுபடியை பாதிக்கும் என்ற அதிர்ச்சி தகவல் ஆய்வறிக்கையின் மூலம் வெளிவந்துள்ளது. இதுகுறித்து, யுபாசி தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

தேயிலை செடிகளில் இருந்து இளம் தளிர்கள் தொடர்ந்து பறிக்கப்படுவதால், 'சூப்பர் எல் நினோ'வால் அதிகரிக்கும் வெப்பநிலை, மண்ணின் ஈரப்பதம், காற்றின் ஈரப்பதம், மகசூல் மற்றும் தேயிலையின் தரத்தை நேரடியாக பாதிக்கின்றன. நீலகிரியில் சராசரி வெப்பநிலை 0.50 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது. மேலும், பனிப்பொழிவு, ஆலங்கட்டி மழையின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தேயிலை செடிகளின் வளர்ச்சியும், மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது.

'சூப்பர் எல் நினோ' தாக்கத்தை சமாளிக்க, கிளிரிசிடியா போன்ற நிழல் தரும் மரங்களை வளர்க்க வேண்டும். மேலும், மண் – நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டும். வறட்சியை தாங்கும் சாகுபடி முறைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு பேருந்து பயணிகளுக்கு முக்கிய அறிவிப்பு!

சென்னை, ஜூலை. 28–

கடந்தசில காலங்களாகவே, அரசுப் பேருந்துகளில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிக்க விடுவதாகவும், இதனால் பேருந்திற்குள் ஒருவித இரைச்சல் சூழல் நிலவுவதாகவும் பயணிகளிடமிருந்து புகார்கள் குவிந்த வண்ணம் இருந்தன. குறிப்பாக, நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளும் மூத்த குடிமக்கள், தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளால் அவதிப்படுவோருக்கு இந்த அதிகப்படியான சத்தம் பெரும் மன உளைச்சலைத் தருவதாகத் போக்கு வரத்துறை அமைச்சருக்கு புகார்கள் வந்தன.




இந்தநிலையில், அரசு போக்குவரத்துத்துறை செயலாளர் நிர்மல் ராஜ் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அரசு பேருந்துகளில் பயணிகள் செல்போன் பயன்பாட்டுக்கு புதிய நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதில்,

* சக பயணிகளுக்கு இடையூறு இல்லாமல் செல்போன் பயன்படுத்தவும் ஸ்பீக்கர் போனில் பேசுவது, வீடியோ பார்ப்பது தவிர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.
* பேருந்தில் பயணிகள் இயர்போன், ஹெட்போன் பயன்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
* ஓட்டுநர்கள் பேருந்துகளில் சத்தமான பாடல்களை ஒலிக்க விடக்கூடாது. அனைத்து பேருந்துகளிலும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்ட உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யூரியா இறக்குமதியில் தட்டுப்பாடு: மாற்று வழிக்கு அனுமதி அளித்த மத்திய அரசு!


புதுடெல்லி, ஜூலை. 28–

உலக அளவில் யூரியா உரத்தை இந்தியாதான் அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது. சீனாவில் இருந்தே அதிகமான அளவு யூரியாவை இந்தியா இறக்குமதி செய்தாலும் தேவை பூர்த்தியாகவில்லை. இந்த நிலையில்தான் யூரியாவுக்கு மாற்றாக, அன்ஹைட்ரஸ் அமோனியாவை பயன்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.




அன்ஹைட்ரஸ் அமோனியா என்பது திரவ வடிவில் உள்ள வாயுவாகும். இதை மண்ணில் உட்செலு த்தி பயிர் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படுகிறது. திட வடிவ யூரியாவில் 46 சதவீதம் நைட்ரஜன் உள்ளது. ஆனால், அன்ஹைட்ரஸ் அமோனியாவில் 82 சதவீதம் நைட்ரஜன் உள்ளது.

இந்த வாயுவை விவசாய நிலங்களில் பயன்படுத்துவதற்கு மண்ணுக்குள் உட்செலுத்தும் சிறப்பு தொழில்நுட்பம் மற்றும் அதற்கான உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டியுள்ளது. அன்ஹைட்ரஸ் அமோனியா பயன்பாடு சரியாக அமல்படுத்தப்பட்டால், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அடுத்து விவசாயத்தில் இதை நேரடியாக பயன்படுத்தும் உலகின் 4–வது நாடாக இந்தியா இருக்கும்.




## "ஜனநாயகன்" படத்தில் நீக்கப்பட்ட காட்சிகள் விரைவில் வெளியீடு!



'ஜனநாயகன்' திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த 6 காட்சிகள் இறுதிக்கட்ட எடிட்டிங்கில் நீக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அவை விரைவில் வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

சமீபத்தில் அளித்த பேட்டியில் இயக்குநர் எச். வினோத், நீக்கப்பட்ட காட்சிகள் குறித்து பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில், விஜய் இடம்பெற்ற 2 ஜாலியான காட்சிகள், 2 ஆக்‌ஷன் காட்சிகள் மற்றும் 2 செண்டிமெண்ட் காட்சிகள் இறுதிப் பதிப்பில் இடம்பெறவில்லை என்றும், அந்த காட்சிகளை விரைவில் ரசிகர்களுக்காக வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இந்த காட்சிகளை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# பாம்பன் பழைய தூக்குப்பாலத்தின் ஒரு பகுதி முழுமையாக வெட்டி அகற்றம்!

ராமேசுவரம், ஜூலை. 28–

ராமேசுவரம் தீவை இணைப்பதில் கடலுக்குள் அமைந்துள்ள பாம்பன் பழைய ரெயில் பாலம் மிக முக்கிய பங்கு வகித்து வந்தது. சுமார் 110 ஆண்டுகளுக்கு மேலாக ரெயில் போக்குவரத்து சிறப்பாக நடைபெற்று வந்த பாம்பன் பழைய ரெயில் பாலத்தின் அருகிலேயே ரூ.545 கோடியில் புதிதாக ரெயில் பாலம் திறக்கப்பட்டது. கடலுக்குள் உள்ள பழைய ரெயில் பாலத்தின் மையப்பகுதியில் உள்ள தூக்குப்பாலத்தை வெட்டி அகற்றும் பணியானது கடந்த 5 மாதங்களுக்கு மேலாக



நடைபெற்று வரு கிறது. இதற்காக ரெயில்வே துறை மூலம் நிதி ஒதுக்கப்பட்டு தனியார் நிறுவனம் மூலம் பாம்பன் பழைய ரெயில் பாலத்தை வெட்டி அகற்றும் பணியானது நடைபெற்று வருகிறது. அதற்காக தூக்குப்பாலத்தின் அரு கில் கிரேன் ஒன்று நிறுத்தப்பட்டு தொழிலாளர்கள் வெல்டிங் மூலம் தூக் குப்பாலத்தின் இரும்பு கம்பிகளை பகுதி வாரியாக வெட்டி எடுக்க வருகின்றது.

இந்த நிலையில் தூக்குப்பாலத்தின் ஒரு பகுதியானது முழுமையாக வெட்டி அகற்றப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டி அகற்றப்பட்ட தூக்குப்பாலத்தின் உதிரிபாகங்கள் அனைத்தும் பாம்பன் ரெயில் பாலத்தின் நுழைவுப்பகுதியில், ரெயில்வே நிலையப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் தூக்குப்பாலத்தின் மற்றொரு பகுதியை வெட்டி அகற்றும் பணியானது வருகிற ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் இருந்து தொடங்கும் என்று கூறப்படுகிறது. பருவமழை சீசன் தொடங்குவதற்கு முன்பாக தூக்குப்பாலத்தின் மற்றொரு பாதியையும் முழுமையாக வெட்டி அகற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக ரெயில்வே உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## 5-வது தலைமுறை போர் விமானங்களை நிறுத்திய சீனா!



சீனா, ஜூலை. 28–
இந்திய எல்லையை ஒட்டியுள்ள தனது விமானப் படைத் தளங்களில், 5வது தலைமுறை போர் விமானங்களை நிலைநிறுத்தி உள்ளது சீனா.

11 ஜே–20 ரக போர் விமானங்கள் நிறுத்தப்பட்டிருப்பது சாட்டிலைட் படங்களில் தெரியவந்துள்ளது. இந்தியாவை இலக்காகக் கொண்டு, ஒரே நேரத்தில் இவ்வளவு ஜே–20 போர் விமானங்கள் (குவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என கூறப்படுகிறது.

ஜூன் மாதத்தின் பிற்பகுதியிலும் ஜூலை மாதத்தின் முற்பகுதியிலும் இரண்டு சீன விமானத் தளங்களில் 12 ஜே–20 ஸ்டெல்த் போர் விமானங்கள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதைக் செயற்கைகோள் படங்கள் காட்டுகின்றன.

சின்ஜியாங்கில் உள்ள ஹோட்டானில் எட்டு போர் விமானங்கள் இருப்பதைக் காட்டுகின்றன. இது இந்தியாவின் லே நகரத்திலிருந்து சுமார் 400 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேலும் நான்கு போர் விமானங்கள் திபெத்தில் உள்ள டாம்சுங்கில் காணப்பட்டன. இந்தத் தளம் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள தவாங்கிற்கு வடமேற்கே 344 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

5வது தலைமுறை போர் விமானங்கள் எதுவும் தற்போது இந்தியாவில் செயல்பாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர் அதிகாரி பணிகளுக்கு டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வு அறிவிப்பு!

சென்னை, ஜூலை. 28–
**பணியிடங்கள் விவரம்:**

1. துணை கலெக்டர்: 12 இடங்கள். தகுதி: ஏதாவதொரு பாடத்தில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. உதவி கமிஷனர் (வணிக வரிகள்): 2 இடங்கள்.



தகுதி: ஏதாவதொரு பாடத்தில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சியுடன் வரிகள் சட்டத்தில் டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. துணை பதிவாளர்: (கூட்டுறவு சங்கங்கள்): 3 இடங்கள். தகுதி: ஏதாவதொரு பாடப்பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4. மாவட்ட பதிவாளர்: 8 இடங்கள். தகுதி: ஏதாவதொரு பாடத்தில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

5. உதவி தொழில் கமிஷனர்: 1 இடம். தகுதி: ஏதொவதொரு பாடப்பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான வயது வரம்பு: 21 லிருந்து 34க்குள் இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பில் எஸ்சி/எஸ்டி/பிற்படடோர்/மிகவும் பிற்பட்டோர்/ சீராய்வு மரபினர் ஆகியோருக்கு அரசு விதிமுறைப்படி தளர்வு அளிக்கப்படும்.

**சம்பளம்:** அரசு விதிமுறைப்படி வழங்கப்படும்.

கட்டணம்: முதல்நிலை தேர்வு (பிரிலிமினரி) மற்றும் முதன்மை தேர்வு (மெயின்) கட்டணமாக ரூ.300 செலுத்த வேண்டும். இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும். எஸ்சி/எஸ்டி/மாற்றுத்திறனாளிகள்/விதவைகளுக்கு கட்டணம் கிடையாது.

விண்ணப்பதாரர்கள் டிஎன்பிஎஸ்சியால் நடத்தப்படும் எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு, உடல்திறன் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

www.tnpsc.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில்விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 29.07.2026.

## தலைவரான தனுஷ்! குழப்பத்தில் ரசிகர்கள்!!



சென்னை, ஜூலை. 28–
தனுஷின் பிறந்த நானான இன்று பொது போஸ்டர் வெளியாகியுள்ளது. அதில், வழக்கத்திற்கு மாறாக, தலைவர் தனுஷ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ரசிகர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்போஸ்டரை ஓம் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி பகிர்ந்ததால் பலரும் அரசியலுக்குத் தனுஷ் வரப்போகிறார் என விமர்சித்தும் வருகின்றனர்.

அண்மையில், நலத்திட்ட உதவிகளை வழங்கிய தனுஷ் தன் ரசிகர்களிடம், “இங்கே இவ்வளவு பேர் கூடியிருக்கிறீர்கள். நம் ஒற்றுமைக்குப் பெரிய சக்தி உண்டு. அதற்கு நோக்கமும் உண்டு. சும்மா வந்தோம், என்னைச் சந்தித்தோம், புகைப்படம் எடுத்தோம் என மட்டும் இருக்கக் கூடாது. உங்களைச் சுற்றியுள்ளவர்கள் சிக்கல்களில் இருந்தால் உதவுங்கள். அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளைச் செய்யுங்கள். அதற்கு எல்லாரும் கைகோர்க்க வேண்டும். நீங்கள் அதனைச் செய்வீர்கள் என நம்புகிறேன். என்னை இன்னும் வேகமாக ஓட வைக்கும் உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி... ஓம் நமச்சிவாய... ஜெ..!” எனத் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ரூ.10, ரூ.20 நோட்டுகள் இனி பிளாஸ்டிக்கில்? மத்திய அரசு ஒப்புதல்!




புதுடெல்லி, ஜூலை. 28–
இந்தியாவில் முதன்முறையாக பாலிமர் (பிளாஸ்டிக்) ரூபாய் நோட்டுகளை சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, ரூ.10 மற்றும் ரூ.20 மதிப்புள்ள 100 கோடி நோட்டுகள் வீதம் பாலிமர் தாளில் அச்சிட்டு பரிசோதனை மேற்கொள்ள இந்திய ரிசர்வ் வங்கி (RBI) திட்டமிட்டுள்ளது.

மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி, ரூபாய் நோட்டுகளின் நீடித்த பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் இந்த முயற்சிக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்தார். பாலிமர் நோட்டுகள் சாதாரண காகித நோட்டுகளை விட அதிக காலம் நீடிக்கும். அவை எளிதில் கிழியாது, ஈரத்தால் பாதிக்கப்படாது என்பதால் பராமரிப்பு செலவும் குறையும் என்று ரிசர்வ் வங்கி கருதுகிறது.

அதே நேரத்தில், தற்போது புழக்கத்தில் உள்ள காகித ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்படாது என்றும், பாலிமர் நோட்டுகள் அவற்றுடன் சேர்ந்து புழக்கத்தில் இருக்கும் என்றும் அரசு விளக்கம் அளித்துள்ளது.

மேலும், பாலிமர் நோட்டுகள் தயாரிப்பதற்கான தொழில்நுட்பம் மற்றும் மூலப்பொருட்களை பெற சர்வதேச அளவில் டெண்டர் கோரப்பட்டுள்ளது. இதில் தேசிய பாதுகாப்பு காரணங்களால் சீனா, பாகிஸ்தான் தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அந்நாடுகளில் இருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யக்கூடாது என்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்த பின்னரே பாலிமர் நோட்டுகள் நாடு முழுவதும் விரிவாக அறிமுகப்படுத்தப்படுமா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். தற்போது டிஜிட்டல் பரிவர்த்தனைகளும், காகித ரூபாய் நோட்டுகளும் வழக்கம்போல தொடரும் என்று அரசு தெரிவித்துள்ளது.

## பரந்தூர் ஏர்போர்ட் திட்டம் தாமதம்... மெட்ரோ திட்டம் தொடரும்!



சென்னை, ஜூலை. 28–
பரந்தூர் இரண்டாவது விமான நிலையத் திட்டம் குறித்து இன்னும் உறுதியான முடிவு வெளியாகாத நிலையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL) பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. பூந்தமல்லிபரந்தூர் 52.94 கி.மீ. மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டம் கைவிடப்படவில்லை என்றும், திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரை 27.9 கி.மீ. தூரத்திற்கு 14 உயர்மட்ட நிலையங்களுடன் ரூ.8,779 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுங்குவார்சத்திரம் முதல் பரந்தூர் வரை உள்ள பகுதி, விமான நிலையத் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்து அடுத்த கட்டத்தில் செயல்படுத்தப்படும்.

பூந்தமல்லி, சுங்குவார்சத்திரம், ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட தொழில் வளர்ச்சி மண்டலங்களுக்கு தினசரி பயணம் செய்யும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்த மெட்ரோ திட்டம் பெரும் பயனளிக்கும். பரந்தூர் விமான நிலையத் திட்டத்தில் தாமதம் ஏற்பட்டாலும், மெட்ரோ ரயில் திட்டம் தொடரும் என்பது முதலீட்டாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நம்பிக்கையளிக்கும் செய்தியாக அமைந்துள்ளது.

## பழனி கோயில் நில மோசடி: சார்பதிவாளர் மீண்டும் ஆஜர்!



பழனி, ஜூலை. 28–
பழனி கோயில் நில மோசடி வழக்கு தொடர்பாக சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டனிடம் 2வது நாளாக விசாரணை நடைபெறுகிறது. சிபிசிஐடி DSP அஜய் தங்கம், ஜஸ்டின் மணிகண்டனிடம் விசாரணை நடத்துகின்றனர். திண்டுக்கல் சிபிசிஐடி அலுவலகத்தில் சார்பதிவாளர் நேரில் ஆஜரானார்.

## வைப்பு நிதியில் இருந்து யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதி அறிமுகம்!





புதுடெல்லி, ஜூலை. 28–
தொழில்நுட்ப சிக்கல்களை சரிசெய்யும் பணியில் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அனைத்து முக்கிய தொழில்நுட்ப கோளாறுகளும் முன்னுரிமை அடிப்படையில் சரிசெய்யப்பட்டு வருகின்றன. அதன் பின்னரே தற்போதைய நிலைமை சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்நுட்ப கோளாறுகள் சரி செய்யப்பட்டு அடுத்த மாதம் (ஆகஸ்டு) முதல் வாரத்திற்குள் வருங்கால வைப்பு நிதியில் இருந்து யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதி நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் இந்த திட்டத்தை அமல்படுத்த திட்டமிடப்பட்டு இருந்தது.

வருங்கால வைப்பு நிதியில் இருந்து யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதி ‘பீம்’ செயலி மூலம் இணைக்கப்பட உள்ளது. இதன்மூலம் வைப்பு நிதி சந்தாதாரர்கள் தங்கள் கணக்குகளை, வங்கி கணக்குகளுடன் இணைத்து, தகுதியான கோரிக்கைகளுக்கான பணத்தை உடனடியாக பெறமுடியும். பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்திய தேசிய பண பரிவர்த்தனை கழகத்துடன் இணைந்து இதற்கான ஏ.பி.ஐ. கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. டிஜிட்டல் சேவைகளை நவீனப்படுத்தி, சந்தாதாரர்களின் கோரிக்கைகளை விரைவாக தீர்ப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நெல்லை பல்கலை. விழாவில் சர்ச்சை!



நெல்லை, ஜூலை. 28–
நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 33–வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்துகொண்டுள்ளார். இந்த விழாவில் மொத்தம் 37 ஆயிரத்து 877 பேர் பட்டம் பெற உள்ளதாகவும், கவர்னர் அர்லேகர் நேரடியாக 871 பேருக்குப் பட்டங்களை வழங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் பட்டமளிப்பு விழாவில் 871 பேருக்கு நேரடியாகப் பட்டங்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தங்கம் பதக்கம் பெறும் 113 பேருக்கு மட்டுமே கவர்னர் நேரடியாகப் பட்டங்கள் வழங்குவார் என அறிவிக்கப்பட்டது. இதனால் கவர்னரிடம் நேரடியாகப் பட்டங்களைப் பெறுவோம் என்ற நம்பிக்கையில் வந்த மாணவ, மாணவிகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

இதனால் பட்டமளிப்பு விழாவிற்கு வந்திருந்த மாணவிகள் பலர் கண்ணீர் விட்டு அழுதனர். மேலும் இந்த அறிவிப்புக்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து பல்கலை., நிர்வாகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, கவர்னரே அனைவருக்கும் பட்டம் வழங்குவார் என்றும் கவர்னரின் செயலாளர் சஜன்சிங் சவான் அறிவித்தார். இதனால் பட்டமளிப்பு விழாவில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் சுமார் 45 நிமிடம் தாமதமாக பட்டமளிப்பு விழா தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவில் முதலில் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்ததற்கு கண்டனம் தெரிவித்து உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ளார்.

இதைபோல தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாக பாடப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்ததற்கு கண்டனம் தெரிவித்து பட்டமளிப்பு விழாவை புறக்கணிப்பதாக நெல்லை தவெக எம்எல்ஏ முருகன், கடையநல்லூர் எம்எல்ஏ ராஜேந்திரன் அறிவித்துள்ளனர். தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதிப்பதாக அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்புகள் போராட்டம் நடத்துவதால் பல்கலைக்கழகத்திற்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## ஜூலை 31 முதல் சிக்கன் விற்பனை நிறுத்தம்?




சென்னை, ஜூலை. 28–
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஜூலை 31 முதல் பிராய்லர் கோழி விற்பனையை நிறுத்த கோழி வணிகர்கள் முடிவு செய்துள்ளனர். இதனால் 60,000–க்கும் மேற்பட்ட கோழி கடைகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளதால் சிக்கன் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. விற்பனைக்கு அனுப்பப்படும் கோழிகளுக்கு குறைந்தது 15 மணி நேரத்திற்கு முன்பே தீவனம் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் முன்வைத்துள்ளனர். தீவனம் காரணமாக கோழியின் எடை செயற்கையாக அதிகரித்து, வாடிக்கையாளர்கள் ஒரு கோழிக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை கூடுதலாக செலுத்த வேண்டிய நிலை ஏற்படுவதாகவும், இறைச்சி யின் தரமும் பாதிக்கப்ப டுவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டு ள்ளதால், உணவகங்கள் முன்கூட்டியே சிக்கன் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் நாட்டுக்கோழி உள்ளிட்ட மாற்று இறைச்சிகளை நாட வேண்டிய சூழல் உருவாகலாம்.

## காமன்வெல்த்: ஒரே நாளில் 6 பதக்கங்களை வென்ற இந்தியா!



புதுடெல்லி, ஜூலை. 28–
ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், 23–ஆவது காமன்வெல்த் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டிகளின் 5–ஆவது நாளான நேற்று இந்தியா 1 தங்கம் உள்பட 6 பதக்கங்களை வென்றுள்ளது.

தடகளம், பாரா தடகளம் மற்றும் பளுதூக்குதலில் இந்தியாவுக்கு சிறப்பான நாளாக அமைந்துள்ளது. 1 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என இந்திய வீரர்கள் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

பாரா தடகளத்தில் பெண்களுக்கான F57 பிரிவு குண்டு எறிதல் போட்டியில் ஷர்மிளா தன்கர் பங்கேற்றார். இவர், பாரா தடகளத்தில் இந்தியாவிற்கு முதல்முறையாக தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் சர்வேஷ் குஷாரே வெள்ளிப் பதக்கம் வென்றார்.

மகளிருக்கான பளுதூக்குதல் போட்டியில் 53 கிலோ பிரிவில் ஞானேஸ்வரி யாதவ் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

ஆண்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 79 கிலோ பிரிவில் வல்லூரி அஜய பாபு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

பாரா தடகளத்தில் பெண்களுக்கான F57 பிரிவு குண்டு எறிதல் போட்டியில் ஷில்பா கே. ஷைலா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதில், ஒரே போட்டியில் இருவர் பதக்கம் வென்றுள்ளனர்.

மகளிருக்கான பளுதூக்குதல் போட்டியில் 58 கிலோ பிரிவில் பிந்தியாராணி தேவி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்த வெற்றிகளின் மூலம் இந்தியா காமன்வெல்த் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் 8–ம் இடம்பிடித்துள்ளது. முதலிடத்தில் ஆஸ்திரேலியா 59 பதக்கங்களுடன் (26 தங்கம், 13 வெள்ளி மற்றும் 20 வெண்கலம்) தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020